## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

**Case No : C.C. 324/2023**

**Prosecution witness : எ.ம.சா.3** **Date : 27.02.2024**

| | |
|---|---|
| **Name : சங்கர்சாமி** | **Taluk : ஊத்துக்குழி** |
| **Father Name : சின்னசாமி** | **Calling : சுயதொழில்** |
| **Village : ஆர்.எஸ்.ஊத்துக்குழி** | **Age : 47** |

**(Accused Present. Complainant absent. Filed petition and allowed.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன பெயரில் காஜா பட்டன் தொழில் செய்து வருகிறேன் என்றால் ஜெய் காஜா பட்டன் சென்டர் என்ற விலாசத்தில் கடை நடத்தி வருகிறேன். எத்தனை மிசின் போட்டு தொழில் செய்து வருகிறேன் என்றால் 10 மிசின் போட்டு நடத்தி வருகிறேன். கடை நடத்துவதற்கு லைசன்ஸ் வாங்கி நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. காஜா பட்டன் கடை எந்த இடத்தில் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் ஊத்துக்குழி RS என்ற இடத்தில் நடத்தி வருகிறேன். எதிரி பனியன் தைக்கும் கம்பெனி வைத்துள்ளார் என்றால் சரிதான். எதிரி சுயதொழிலா அல்லது கூட்டுத்தொழிலா என்று எனக்கு தெரியாது. எதிரி பனியன் தைக்கும் மிசின் எத்தனை வைத்துள்ளார்என்றர்ல் 20 மிசின் வைத்துள்ளார். எதிரியிடம் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்றால் 20 பேர் செய்கிறார்கள். எத்தனை சிப்ட்டுகளாக வேலை நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. காஜா பட்டன் தைக்க துணி வாங்கினால் அதற்கு டெலிவரி ரசீது கொடுப்போம் என்றால் சரிதான். எதிரிக்கு நான் டெலிவரி ரசீது கொடுத்தேனா என்றால் எதிரிதான் எனக்கு கொடுத்தார். டெலிவரி ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரியின் சொந்த ஊர் தெரியுமா

என்றால் கொளத்தூர் என்று சொல்லியுள்ளார். குறிப்பிட்டு எந்த ஊர் என்று தெரியாது. எதிரியின் கடைக்கும், எனது கடைக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 5 கிலோ மீட்டர் இருக்கும். எதிரி துணியை எந்த வாகனத்தில் கொண்டு வருவார் என்றால் இருச்சக்கர வாகனத்தில் கொண்டுவருவார். இருச்சக்கர வாகனத்தில் வரும் துணிகள் எந்தவகையான துணிகள் என்று தெரியுமா என்றால் ஆண்கள் போடும் துணிகள். எதிரியை எனக்கு தொழில் ரீதியாக பழக்கம் என்பதால், எதிரி கேட்டுக்கொண்டதால் இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 15.05.2023 ம் தேதி காலை நேரத்தில் எதிரி என்ன வேலை செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரி கேட்டுக்கொண்டதால் இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**